பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
19 09 2024 **THURSDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

2. இந்திய - பசிபிக் பிராந்தியத்தில் இந்திய கடற்படை வலிமையானதாக மாறியுள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. மகளிரின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஹரியானா மாநிலத்தில் அனைத்து மகளிருக்கும் மாதந்தோறும் 2 ஆயிரத்து 100 ரூபாய் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை பிஜேபி தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

5. பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 339 ரன் எடுத்துள்ளது.

**>>>>><<<<<**

ஜம்மு காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்தை பிஜேபியால் மட்டுமே வழங்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முதல்கட்ட வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், வரும் 25ஆம் தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள ஸ்ரீநகரில் இன்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

முதல்கட்ட தேர்தலைப் போன்றே இரண்டாம் கட்ட தேர்தலிலும் மக்கள் அதிக அளவில் வாக்களிக்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீண்டும் உருவாக்குவோம் என நாடாளுமன்றத்தில் அளித்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள், வாரிசு அரசியலில் ஈடுபட்டு ஜம்மு காஷ்மீரில் அரசியல் ஆதாயம் அடைய முயற்சிப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

**>>>>><<<<<**

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், மூன்று நாள் பயணமாக தத்ராநகர் ஹவேலி மற்றும் டாமன் டையூ தீவுகளுக்கு நாளை புறப்பட்டுச் செல்கிறார்.

அங்கு பல்வேறு கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

டாமனில் உள்ள **Jumprin** என்னுமிடத்தில் சுகாதார மையத்தை பார்வையிடும் குடியரசு துணைத்தலைவர், நாளை மறுநாள் நமோ மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

**>>>>><<<<<**

இந்திய - பசிபிக் பிராந்தியத்தில் இந்திய கடற்படை வலிமையானதாக மாறியுள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இரண்டாவது கடற்படை தளபதிகள் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைதி மற்றும் வளத்தை ஊக்குவிப்பதில், கடற்படை முக்கிய பங்காற்றியதாக பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் கடல்சார் நலன்களை பாதுகாப்பதில் இந்திய கடற்படை தயார்நிலையில் உள்ளதாகவும், உலக வர்த்தகத்தின் பெரும்பகுதி இந்தியப் பெருங்கடல் வழியாக நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

கடல்சார் பொருளாதாரம், வர்த்தகம், போக்குவரத்து மற்றும் ஒட்டுமொத்த நாட்டு நலனை பாதுகாக்க கடற்படையின் திறன் மேம்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மகளிரின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மூன்றாவது முறையாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற முதல் 100 நாட்களின் சாதனைகளை விளக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கூட்டுறவுத் துறையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

இயற்கை விவசாயத்தை வலுபடுத்தவும், அதன்மூலம் மண்வளத்தை மேம்படுத்தவும் மத்திய அரசு இரண்டாம் கட்ட வெண்மைப்புரட்சியை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டில் வேளாண் உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு நிதியை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு, மூன்றாவது முறையாக பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், வேளாண் துறையின் முன்னேற்றங்கள் குறித்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பிரதமர் விவசாயிகள் நல நிதி திட்டத்தின் கீழ், 21 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் 25 லட்சம் புதிய விவசாயிகள் சேர்க்கப்பட்டிருப்பதன் மூலம், மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 9 கோடியே 51 லட்சமாக உயர்ந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்தி, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க ஏதுவாக 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் பிரதமரின் ஆஷா திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளுக்கு நிதி பாதுகாப்பு வழங்கும் மற்றொரு குறிப்பிடத்தக்க திட்டமாக பிரதமரின் ஃபஸல் பீமா யோஜனா காப்பீட்டு திட்டம் அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் புதிய நிகழ்ச்சி தொடங்கப்படும் என்றும் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஹைட்ரஜன் பயன்பாட்டை அதிகப்படுத்தி புதைபடிம எரிபொருள் இறக்குமதியை குறைக்க அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தற்போது 22 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதைபடிம இறக்குமதியை, 4 லட்சம் கோடி ரூபாயாக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கழிவுகளிலிருந்து ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தி செய்யப்பட்டு, கார்களில் பயன்படுத்தக்கூடிய **Mirai** திட்டத்திற்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, ஒரு கிலோ, ஒரு டாலர் என்ற விலையில் வழங்குவதன் மூலம் எரிசக்தி ஏற்றுமதி நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமரின் அமெரிக்க பயணத்தின் போது, க்வாட் உச்சிமாநாடு தவிர பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுக்களும் நடத்தப்படவிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுச் செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, நாளை மறுநாள் தொடங்கி, வரும் 23ஆம் தேதிவரை மூன்று நாள் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அமெரிக்கா செல்லவிருப்பதாக கூறினார்.

பயணத்தின் தொடக்கமாக, **Delaware** மாகாணம், **Wilmington-**ல் நடைபெறும் க்வாட் உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருடனும் பிரதமர் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேசவிருப்பதாகவும் திரு. விக்ரம் மிஸ்ரி கூறினார்.

**>>>>><<<<<**

ஹரியானா மாநிலத்தில் அனைத்து மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 100 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று பிஜேபி தெரிவித்துள்ளது.

ஹரியானா சட்டப்பேரவை தேர்தலுக்கான அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை அதன் தேசியத் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, **Rohtak** நகரில் வெளியிட்டார்.

ஹரியானாவில் 10 தொழில் நகரங்கள் ஏற்படுத்தப்படும், ஒவ்வொரு நகரங்களிலும் தலா 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை வழங்கப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளும் அந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி, மத்திய அமைச்சர் திரு. மனோகர் லால், பிஜேபி மாநிலத் தலைவர் திரு. மோகன்லால் பதவ்லி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**>>>>><<<<<**

கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் தொடர்பான வழக்கின் விசாரணையை சிபிஐ-க்கு மாற்றக் கோரிய மனுமீதான தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துள்ளது.

இதுகுறித்து அஇஅதிமுக, பாமக மற்றும் பிஜேபி சார்பில் தொடரப்பட்ட பொதுநல மனுக்கள் மீதான விசாரணை, உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்றது.

இந்த சம்பவம் தொடர்பாக, மதுவிலக்கு துணை ஆணையர் மற்றும் எட்டு காவல்துறையினர் மீதான தற்காலிக பணிநீக்க நடவடிக்கை தொடர்வதாக அரசு தலைமை வழக்கறிஞர் பி. எஸ். ராமன் தெரிவித்தார்.

காவல் கண்காணிப்பாளருக்கு எதிராக துறை ரீதியிலான விசாரணை நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, கல்வராயன் மலைப்பகுதி மக்களுக்கு ரேஷன் மற்றும் ஆதார் அட்டை வழங்க வேண்டும் என்ற உத்தரவை செயல்படுத்தாவிட்டால், தலைமைச்செயலாளர் நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அப்பகுதி மக்களின் மேம்பாடு தொடர்பாக, தாமாக முன்வந்து வழக்கு விசாரணையை நடத்தி வரும் நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், என். மாலா அமர்வு இந்த உத்தரவினை பிறப்பித்தது.

**>>>>><<<<<**

சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சொந்த 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டதாக கூறப்படுவது குறித்த விவரங்களை உரிய ஆவணங்களுடன் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று இந்துசமய அறநிலையத் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, ஆண்டிற்கு 3 கோடி ரூபாய்க்கும் கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டதாகவும், தற்போது தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் மட்டுமே வருமானம் வருவதாகவும் அந்த துறை வழக்கு தொடர்ந்திருந்தது.

இந்த வழக்கை விசாரித்து வரும், நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், எஸ். சௌந்தர் ஆகியோரைக் கொண்ட அமர்வு இன்று இந்த உத்தரவை பிறப்பித்தது.

**>>>>><<<<<**

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதல் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 339 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்த தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் 56 ரன்னுக்கும், ரிஷப் பந்த் 39 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

அஸ்வின் 102 ரன்னுடனும் ஜடேஜா 86 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

**>>>>>END<<<<<**